**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**E.A.65/2014 in E.P 4/2013 in RCOP 1/1998**

2026=ம் ஆண்டு ஜுன் மாதம் 19ம் நாள் வெள்ளிக்கிழமை நீதிமன்ற சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**Deposition of Witness for PW 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வாசுதேவன் | தொழில் | : | வழக்கறிஞர் |
| தந்தை பெயர் | : | பெருமாள் | வயது | : | 43 |
| கிராமம் | : | நம்பேடு | | : | |
| தாலுக்கா | : | வந்தவாசி | | : | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 19.06.2026. நேரம் - 1.30**

**முதல் விசாரணை**

நான் இந்நீதிமன்ற அசல் வழக்கு எண்.206/2013 என்ற வழக்கில் இடை மனு எண்.433/2013 என்ற மனுவில் வழக்கறிஞர் ஆணையராக நியமிக்கப்பட்டு மனு சொத்தை பார்வையிட்டேன். மனு சொத்தானது கடை எண்.143ஏ, பெரிய கடை வீதி, ஆரணி டவுன் என்ற விலாசத்தில் உள்ளது. மனு கடையை கிருஷ்ணன் டீ ஸ்டால் என்ற பெயரில் ஆறுமுகம் என்பவர் டீக்கடை வைத்து நடத்தி வருகிறார். 143ஏ கடைக்கு வடக்கு பக்கத்தில் சிவசக்தி நகை அடகு கடை உள்ளது. அதன் பதிவு சான்றை பார்த்த போது அதில் கடை எண். 144, பெரிய கடை வீதி, ஆரணி என்றும், அதன் உரிமையாளர் தாஸ் பிரகாஷ் என்றும் கண்டுள்ளது. 143ஏ கடையின் பதிவு சான்று ஆறுமுகம் பெயரில் உள்ளது.

2. நான் இடத்தை பார்வையிட்ட போது ஆறுமுகம், அவர் வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதிகள் மற்றும் அவர்களுடைய வழக்கறிஞரும் உடன் இருந்தார்கள். நான் கடை எண். 143ஏ மற்றும் 144 கடைகளை பார்வையிட்டு, மேற்படி அசல் வழக்கான 206/2013 என்ற வழக்கில் இடை மனு எண்.433/2013 என்ற மனுவில் வழக்கறிஞர் அறிக்கை மற்றும் வரைபடத்தை தாக்கல் செய்துள்ளேன். மேற்படி அறிக்கை மற்றும் வரைபடம் சான்றிட்ட நகல் **ம.சா.ஆ.19** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

முதல் விசாரணை முடிவடைந்தது.

**நேரம் - 1.40**

<u>குறுக்கு விசாரணை</u>

**நேரம் - 3.45**

மனு சொத்தின் வடக்கு புறத்தில் உள்ள சிவசக்தி நகை அடகு கடையின் உரிமையாளர் யார் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் வரைபடத்தில் குறிப்பிடவில்லை ஆனால் அறிக்கையில் தாஸ் பிரகாஷ் உரிமையாளர் என்று குறிப்பிட்டுள்ளேன். நான் கடையை நடத்தும் உரிமையாளர் பெயரைதான் குறிப்பிட்டுள்ளேன் என்றாலும், கடையின் உரிமையாளரை (Building owner) யார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதுப்போல் தமிழ்நாடு உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாக துறை பதிவு சான்றிதழ் என்று என் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதற்கான நகலை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை.

2. அதேப் போல் என் அறிக்கையில் காலாவதியான சான்றிதழ் என்றுதான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதேப்போல் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சான்றிதழ் என்று குறிப்பிட்டுள்ளதன் நகலை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. அதேப் போல் என் அறிக்கையில் கிருஷ்ணன் டீ ஸ்டால் என்ற அறிக்கை பலகையை கடையின் உள் அறையில்தான் இருந்தது என்றாலும், வெளியில் இல்லை என்றால் சரிதான். அதில் ஆறுமுகம் பெயர் புதியதாக சேர்க்கப்பட்டது என்றால் சரிதான். கடையின் உரிமையாளர் பவுனம்மாள் என்று குறிப்பிட்டுள்ளேன், அவர் யார் என்ற விவரத்தை என் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான், பார்வையிட மட்டும் சென்றதால் யார் என்ற முழு விவரத்தை என் அறிக்கையில் குறிப்பிடவில்லை.

3. அதேப்போல் மனு சொத்தின் கிழக்கு பகுதி மோகன் வீடு, மேற்கு பகுதியில் ரோடு பெரிய கடை வீதி, வடக்கு பகுதியில் சிவசக்தி நகை அடகு கடை, தெற்கில் பவுனம்மாள் கடை உள்ளது என்ற விவரத்தை யார் சொல்லி என் அறிக்கையில் குறிப்பிட்டேன் என்றால் நானே நேரில் விசாரித்து குறிப்பிட்டுள்ளேன். யாரிடம் விசாரித்தேன் என்று தற்போது நினைவில்லை. மனு சொத்தின்

உரிமையாளர் யார் என்று என் அறிக்கையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இவ்வழக்கு என்ன வழக்கு என்று எனக்கு தெரியாது, நீதிமன்றத்திலிருந்து சாட்சி அழைப்பாணை பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது.**

**நேரம் - 4.00**

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/-D.V.Koperundevi
District Munsif,
Arni